இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை – 600 006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
**Regional Meteorological Centre**
**New No. 6, College Road, Chennai–600 006**
**Phone: 044- 28271951**

**27th August 2022 / 12:00 IST**

---

## செய்தி வெளியீடு

இந்திய வானிலை துறையால் சென்னை துறைமுகத்தில் S- பேண்ட் வகை டாப்ளர் ரேடார் இயக்கப்பட்டு வருகிறது. ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட இந்த ரேடார் 2002 ஆண்டில் இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் டாப்ளர் ரேடார் ஆகும். கடந்த 20 ஆண்டுகள் இயங்கி வந்த நிலையில் ஆன்டென்னா சார்ந்த இயந்திர பாகம் தேய்மானம் அடைந்ததால் தொடர்ந்து இயக்க முடியாத நிலைஏற்பட்டது. கால போக்கில் ஏற்பட்ட தொழில் நுட்ப மாற்றங்கள் காரணமாக பாதிப்படைந்த பாகத்திற்கான மாற்று பாகம் கிடைக்கவில்லை. மேலும் COVID காரணமாகவும் தீர்வு காண்பதில் தாமதம் ஏற்பட்டது. இந்திய அரசு புவி அமைச்சகம் இந்திய வானிலை துறை மற்றும் இந்திய விண்வெளி கழகம் இணைந்து மேற்கொண்ட தொடர் நடவடிக்கைள் மூலம் உள்நாட்டிலேயே புதிய பாகம் வடிவமைக்கபட்டு தயாரிக்கப்பட்டது. புதிய பாகம் பொருத்தப்பட்டு இந்த ரேடார் மீண்டும் முழு பயன்பாட்டுக்காக இயங்க துவங்கியுள்ளது. ரேடார் நிறுவப்பட்டதிலிருந்து சுயபராமரிப்பு மற்றும் உள்நாட்டு நடவடிக்கைகள் மூலம் மறுசீரமைப்பு அடங்கிய இத்தகைய முயற்சிகள் ’சுதந்திரத் திருநாள் அமுத பெருவிழா’ கொண்டாடும் வேளையில் ’சுயசார்பு’ முயற்சிகளின் சான்றாக விளங்குகிறது.